அந்தப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினை தீரும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

(அஅ) திருவாரூர் மாவட்டம், புயல் மற்றும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த 16 நபர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்து, அதுகுறித்து நம்முடைய முதல்வரின் செயலாளரிடத்திலே கேட்டபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியுதவி கொடுத்துவிட்டு ratification வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்ன நேரத்தில், நாடாளுமன்றத் தேர்தல் வந்து, அது தடைபட்டுவிட்டது. திருவாரூர் மாவட்டத்தில் இறந்த அந்த 16 நபர்களுக்கு நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கடந்த வாரம் மனுவும் கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சியரும் முன்மொழிவு அனுப்பி இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கிட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு மயிலாடுதுறை அருகில் கூறைநாடு என்ற பகுதியில் 4 வீடுகள் எரிந்து சாம்பலாயின. அவ்விபத்தில் எம்.பி.பி.எஸ்., கலந்தாய்வுக்குத் தயாராகிக்கொண்டிருந்த ஒரு மாணவியினுடைய அனைத்துச் சான்றிதழ்களும் பாழாகிவிட்டன. மீதி 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இசை வித்வான்கள். இசையை வைத்துத்தான் அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த இசைக் கருவிகள் எல்லாம் எரிந்து நாசமாகிவிட்டன. வருவாய்த் துறையிலே கேட்கிறபோது, 2 ஆயிரம் ரூபாய்தான் உதவித் தொகை வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், முழுமையான சேதம் ஏற்பட்டால் 5 ஆயிரம் ரூபாய் வரை வழங்கலாம் என்று அரசாணை இருப்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். இது குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.